இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 16-05-2025

# ‘பொல்லாத’ பழனிசாமிக்கு பொள்ளாச்சியே சாட்சி!

பொள்ளாச்சி சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்ட 9 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு வந்துள்ளது. பழனிசாமியின் அ.தி.மு.க. ஆட்சி மறைக்க நினைத்த குற்றத்துக்கு நியாயமான, சரியான தண்டனை தரப்பட்டுவிட்டது.

சபரிராஜனுக்கு 4 ஆயுள் தண்டனை, திருநாவுக்கரசுக்கு 5 ஆயுள் தண்டனை, சதீஷுக்கு 3 ஆயுள் தண்டனை, வசந்தகுமாருக்கு 2 ஆயுள் தண்டனை, மணிவண்ணனுக்கு 5 ஆயுள் தண்டனை, பாபுவுக்கு ஒரு ஆயுள் தண்டனை. ஹெரன்பாலுக்கு 3 ஆயுள் தண்டனை, அருளானந்தத்துக்கு 1 ஆயுள் தண்டனை, அருண்குமாருக்கு 1 ஆயுள் தண்டனை கொடுத்துள்ளார் கோவை மகளிர் நீதிமன்ற நீதிபதி நந்தினி தேவி.

இதில் அருளானந்தம் என்பவர் அ.தி.மு.க. மாணவரணி செயலாளராக இருந்தார். ஊழல்மணியான வேலுமணியின் கைத்தடியாக வலம் வந்துள்ளார். வேலுமணியுடன் பல்வேறு விழாக்களில் பங்கெடுத்துள்ளார். அதேபோல், பொள்ளாச்சி ஜெயராமனுடன் இருக்கிறார். பல்வேறு நிகழ்ச்சிகளில் ஜெயராமனுடன் இருந்துள்ளார். ஜெயராமன் பேட்டி கொடுக்கும் போதெல்லாம் அவரோடு அருளானந்தம் உள்ளார். அ.தி.மு.க.வின் சுவரொட்டிகளில் அருளானந்தம் படம் இடம்பெற்றுள்ளது. அதேபோல் பாபு, ஹெரன்பால் ஆகிய இருவரும் பொள்ளாச்சி ஆச்சிபட்டி ஊராட்சித் தலைவரும் அ.தி.மு.க. பிரமுகருமான ரெங்கநாதனுடன் நெருக்கமாக இருந்தவர்கள்.

**பழனிசாமி முதலமைச்சராகச் சொல்லிக் கொண்டு வலம் வந்த காலத்தில் (2019) பொள்ளாச்சியில் ஒரு மாபெரும் கொடூரம் நடந்தது. ஒரு நாள், இருநாள் அல்ல, பல மாதங்களாக நடந்தது. எல்லாவற்றையும் டி.வி.யில் வந்தால் மட்டுமே தெரிந்து கொள்ளும் பழனிசாமிக்கு பொள்ளாச்சி சம்பவம் டி.வி.யில் வராததால் தெரியவில்லை.**

பல மாதங்களாக – பல பெண்களை மிரட்டி – பாலியல் வன்கொடுமை செய்து – அதனை வீடியோவாகப் பதிவு செய்து – அவர்களை மிரட்டும் செயலை ஒரு கும்பல் செய்து வந்தது. அந்தக் கும்பலில் அ.தி.மு.க. நிர்வாகிகள் இருந்தார்கள். அந்த அ.தி.மு.க. நிர்வாகிகள், அன்றைய அமைச்சர்கள் சிலருக்கு நெருக்கமாகவும் இருந்தார்கள். ஆட்சி நம்ம ஆட்சி, போலீஸ் நம்ம போலீஸ் என்ற மிதப்பில் இந்தக் கும்பல் இந்த அட்டூழியத்தைத் தொடர்ந்து செய்து வந்தது. இதை பழனிசாமியின் போலீசும் கண்டுபிடிக்கவில்லை. பழனிசாமி காலத்தில் உளவுத்துறையை பார்த்தவர்களும், கண்டுபிடிக்கவில்லை. பழனிசாமியின் நாற்காலியைக் காப்பாற்றுவதில்தான் அவர்கள் மும்முரமாக இருந்தார்கள்.

**பாதிக்கப்பட்ட ஒரு பெண் – இந்தக் கும்பலின் மிரட்டலுக்கு அடிபணியாமல் துணிச்சலாக வெளியில் வந்தார். அ.தி.மு.க. ஆட்சியில் காவல்துறை உயரதிகாரியைச் சந்தித்து புகார் சொன்னார். அவர் அதனை கண்டுகொள்ளவில்லை. பின்னர் பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையத்துக்குப் போய் புகார் சொன்னார். யார் மீது புகார் சொல்லப்பட்டதோ, அவர்கள் தரப்புக்கே இந்தச் செய்தி போனது. பாதிக்கப்பட்ட பெண்ணின் அண்ணன் தாக்கப்பட்டார். விவகாரம் பெரிதாக ஆனபிறகு வேறு வழியில்லாமல் பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையத்தில் வழக்குப் பதிந்தார்கள். சபரிராஜன், சதீஷ், வசந்தகுமார், திருநாவுக்கரசு ஆகியோர் கைது செய்யப்பட்டார்கள். இதில் சம்பந்தப்பட்ட அ.தி.மு.க. பிரமுகர்கள் காப்பாற்றப்பட்டார்கள்.**

அ.தி.மு.க. ஆட்சியில் முறையான நீதி கிடைக்காது என்பதால், ‘சி.பி.ஐ.க்கு மாற்றியாக வேண்டும்’ என்று தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள், அமைப்புகள், கோரிக்கை வைத்தது. சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவு போட்டு, இந்த விவகாரத்தை மறைக்க நினைத்தது அ.தி.மு.க. அரசு. ஆனால் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் படி சி.பி.ஐ.க்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது. அந்த சி.பி.ஐ.யிடம் ஆவணங்களை ஒப்படைக்காமல் காலதாமதம் செய்தார்கள். நீதிமன்றம் கடுமையான உத்தரவுகளை போட்ட பிறகுதான் கொடுத்தார்கள்.

சி.பி.ஐ. இந்த வழக்கை விசாரித்த பிறகு தான் அ.தி.மு.க. பிரமுகர் அருளானந்தம் 2021 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அருளானந்தம், ஹெரன்பால் ஆகியோர் கைது செய்யப்பட்ட பிறகுதான் அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டனர். 2019 முதல் 2021 வரை இவர்களை காப்பாற்றி வைத்திருந்தார் பழனிசாமி.

**பொள்ளாச்சியில் இந்தக் குற்றச் சம்பவம் லேசாக வெளியில் தெரிய வந்ததுமே அன்றைய முதலமைச்சர் பழனிசாமியிடம் நிருபர்கள் கேட்டார்கள். ‘இதுக்கெல்லாம் என்ன ஆதாரம் இருக்கிறது? ஆதாரம் இருந்தால் கொடுங்கள், சும்மா யாரும் எதையும் சொல்லலாம்’ என்று சொன்னவர்தான் இந்த பழனிசாமி.**

இந்த விவகாரத்தில் போலீஸ் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று மிரட்டியவர் அ.தி.மு.க. பிரமுகர் பார் நாகராஜன். அன்றைய அமைச்சர் வேலுமணியின் பேரைச் சொல்லி போலீஸை மிரட்டினார். இந்தத் தகவலை தி.மு.க. தலைவர் அம்பலப்படுத்திய பிறகுதான் பார் நாகராஜனை அ.தி.மு.க.வை விட்டு நீக்கினார்கள். தன்னைக் கட்சியை விட்டு நீக்கிய மறுநாளே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்குப் போய் நின்று கொண்டு துணிச்சலாகப் பேட்டி கொடுத்தார் பார் நாகராஜன். பழனிசாமி ஆட்சியில் பாலியல் குற்றவாளிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வாசலில் நின்று பேட்டி கொடுக்கும் அளவில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரித்தது.

இது குறித்து செய்தி வெளியிட்ட ‘நக்கீரன்’ பத்திரிக்கையை ஹரீஸ் என்பவர் மிரட்டினார். முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பெயரைச் சொல்லித்தான் ஹரீஸ் மிரட்டினார். அந்தளவுக்கு குற்றவாளிகள் பழனிசாமியின் முதுகுக்குப் பின்னால் பதுங்கி இருந்தார்கள்.

**“உண்மைக் குற்றவாளிகளை நாட்டுக்கு அடையாளம் காட்டுவேன், யாரும் தப்ப முடியாது”** என்று 4.4.2021 அன்று கோவையில் உரையாற்றிய தி.மு.க. தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதோ, அடையாளம் காட்டி, தண்டனையும் பெற்றுத் தந்து விட்டார்கள். **“இந்த வழக்கில் அரசுத் தரப்பில் 48 சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவரும் பயமின்றி சுதந்திரமாக சாட்சி சொல்லி இருக்கிறார்கள்”** என்று சி.பி.ஐ. தரப்பு அரசு வழக்கறிஞர் சுந்தரமோகன் பேட்டி அளித்துள்ளார். இந்த பாதுகாப்பை வழங்கியது தி.மு.க. ஆட்சியே.

**“அ.தி.மு.க.வைச் சார்ந்த குற்றவாளிகளைப் பாதுகாக்க முயற்சித்த பழனிசாமிக்கு மானமிருந்தால் வெட்கித் தலைகுனியட்டும்” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ‘மானமிருந்தால்’ என்ற சொல்தான் முக்கியமானது!**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.5.2025) நீலகிரி மாவட்டம், தொட்டபெட்டா காட்சிமுனைப் பகுதியில், அங்கு பணிபுரியும் பணியாளர்களுடன் கலந்துரையாடி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் (13.5.2025) அன்று நீலகிரி மாவட்டம், தெப்பக்காடு யானைகள் முகாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வன சரகர்களின் பயன்பாட்டிற்காக 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவிலான 30 பொலிரோ வாகனங்கள் மற்றும் 2 சிறப்பு ரோந்து வாகனங்கள் (All Terrain Vehicles), என மொத்தம் 32 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, வனத்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## அரசின் குழந்தைகள் நலத்திட்டங்களுக்குப் பாராட்டு!

# ‘பெருமை கொள்கிறேன்! ஊக்கம் பெறுகிறேன்!’

## தினமணி தலையங்கத்தைச் சுட்டிக்காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, மே 16 –

தமிழ்நாட்டில் குழந்தை நலத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தி வருவதற்கு தினமணி நாளேடு பாராட்டி தலையங்கம் எழுதியுள்ளது. அதைச் சுட்டிக்காட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிடுகையில், பெருமை கொள்கிறேன். ஊக்கம் பெறுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

திராவிட மாடல் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் குழந்தைகள் நலத் திட்டங்களால் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் தமிழ்நாட்டில் குறைந்துள்ளது என்று “தினமணி” நாளிதழில் பாராட்டி வெளியிடப்பட்டுள்ள தலையங்கம் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**ஒரு தாய்மார் கருவுற்ற காலம் முதல், அவர் பெற்ற குழந்தை பள்ளி, கல்லூரி செல்லும் வரை ஒவ்வொரு நிலையிலும் பார்த்துப் பார்த்து அக்கறையுடன் அத்தனை தேவையையும் நிறைவேற்றுவதற்கு திராவிட மாடல் அரசு பாடுபடுவதற்கான பயனும் பாராட்டும் இதோ!**

**பெருமை கொள்கிறேன்... ஊக்கம் பெறுகிறேன்!!**


தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்
புதன்கிழமை 14-5-2025
விசுவாவசு சித்திரை 31 ஹிஜ்ரி 1446 துல்கஃதா 15

தமிழகம் பெருமைப்படலாம்

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளாக குறைந்து வருகிறது. இது குழந்தைகளின் நலன் மீதான அரசின் அக்கறையைக் காட்டுகிறது. நாட்டின் வளர்ச்சி குழந்தைகளின் ஆரோக்கியத்துடனும் நேரடித் தொடர்பு கொண்டது. மேலும், தமிழகத்தில் செயல்படுத்தப்படும் குழந்தைகள் நலக் கொள்கைகளும் இதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றன.

தமிழக பொது சுகாதாரத் துறை மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை அண்மையில் வெளியிட்ட தரவுகளின்படி, 2022–23–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,000 பிறப்புகளுக்கு 10.9 சதவீதமாக இருந்த குழந்தைகள் இறப்பு விகிதம் 2023–24–ஆம் ஆண்டு 8.9 சதவீதமாகக் குறைந்தது. இது கடந்த 2024–25–ஆம் ஆண்டில் 8.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.

குழந்தைகளின் வளர்ச்சியைத் தொடர்ந்து கண்காணித்தல், தேவையான ஊட்டச்சத்தை உரிய நேரத்தில் வழங்குதல், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தியதால் தமிழகம் இந்த விகிதக் குறைப்பை எட்ட முடிந்தது. இந்த வெற்றியில் தமிழக அரசின் சமூக நலத் துறைக்கு முக்கியப் பங்கு உள்ளது. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கண்காணித்தல், நோய்த் தடுப்பு நடவடிக்கை உள்ளிட்டவற்றை பொது சுகாதாரத் துறையின் வழிகாட்டுதலுடன் சமூக நலத் துறையும் மேற்கொண்டது.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய

# ‘தேசிய கல்விக் கொள்கை - 2020 எனும் மதயானை’ நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார்!

*சென்னை, மே 16 -*

*அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எழுதிய “தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் மதயானை” நூலை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு உரையாற்றுகிறார்.*

*இந்நூல் வெளியீட்டு விழா நாளை (17.5.2025) மாலை 4 மணி அளவில் சென்னை அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தில் நடைபெறுகிறது.*

*இவ்விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.*

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நூலினை வெளியிட்டு உரையாற்றுகிறார்.*

*சிறப்பு விருந்தினர்களாக மத்திய பிரதேச முன்னாள் முதல்வர் திக்விஜய் சிங் எம்.பி., உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதி வி.கோபாலகவுடன், ‘இஸ்ரோ’ முன்னாள் இயக்குநர் பத்மஸ்ரீ மயில்சாமி அண்ணாதுரை ஆகியோர் பங்கேற்கின்றனர்.*

*நிறைவாக, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஏற்புரையாற்றுகிறார்.*

*இந்நூலினை அன்பகம் பதிப்பகம் வெளியிடுகிறது.*

## ஒன்றிய அமைச்சருக்கு தயாநிதி மாறன் எம்.பி. கடிதம்!

# சென்னை - பாலக்காடு எக்ஸ்பிரஸ் ரயிலில் பெண் பயணிக்கு விபத்து!

## விரைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்!

**சென்னை, மே 16 –**

**சென்னை பாலக்காடு எக்ஸ்பிரஸ் (ரயில் எண் 22651) ரயிலில், ஸ்லீப்பர் வகுப்பு பெட்டியின் மிடில் பெர்த் அறுந்து விழுந்ததில் தூங்கிக் கொண்டிருந்த பெண் பயணி ஒருவருக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது, இதனைத் தொடர்ந்து கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிற்கு கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடித விவரம் வருமாறு:

சென்னை-பாலக்காடு எக்ஸ்பிரஸ் ( ரயில் எண் 22651 ) ரயிலில், ஸ்லீப்பர் வகுப்பு பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்த ஒரு பெண் பயணியின் தலையில் மிடில் பெர்த் அறுந்து விழுந்து காயம் ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் உடனடி மருத்துவ உதவி கிடைக்காததும், பாதுகாப்பு கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகளும் இந்திய ரயில்வேயின் சேவை தரத்தையும், பயணிகளின் பாதுகாப்பையும் கேள்விக்குள்ளாக்குகின்றன. குறிப்பாக பழைய ரயில்களில் இது மிகுந்த கவலையை ஏற்படுத்துகிறது.



ஊடகங்களில் வெளியாகிய தகவலின்படி, தூங்கிக்கொண்டிருந்த பெண் பயணியரின் மீது மிடில் பெர்த் அறுந்து விழுந்து காயம் ஏற்பட்டுள்ளது. அவரது கணவரும் மற்ற பயணிகளும் தொடர்ந்து ரயில்வே அதிகாரிகளிடம் மருத்துவ உதவி கோரிய போதும், சேலம் வரை சுமார் 90 நிமிடங்கள் எந்தவொரு முதற்கட்ட மருத்துவ உதவி அளிக்கப்படவில்லை. இது போன்ற தாமதங்கள், எந்தப் பொதுப் போக்குவரத்து அமைப்பிலும் ஏற்கத்தக்கதல்ல, இந்திய ரயில்வே போன்ற மிகப்பெரிய அமைப்பில் இது மிகவும் அதிர்ச்சியளிக்கக்கூடியது.

மேலும், சம்பவம் நடந்த ரயில் பெட்டி 19 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்லீப்பர் பெட்டி, மார்ச் 2025இல் இறுதியாக பராமரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டாலும் . இருபது ஆண்டுகளாக சேவையில் உள்ள இத்தகைய பழமையான பெட்டிகள் பாதுகாப்பு மேம்பாடுகள் மற்றும் கட்டமைப்பு பரிசோதனைகள் இன்றி இன்னும் இயக்கப்படுவதே கவலையளிக்கிறது. பயணியின் தவறான கையாளுதலால் இந்தச் சம்பவம் ஏற்பட்டதாக ரயில்வே அதிகாரிகளால் விளக்கம் கூறப்பட்டாலும், ரயில்வேயின் பாதுகாப்பு கட்டமைப்புக்கான பொறுப்பை இது கேள்விக்குள்ளாக்குகிறது.

இந்த சம்பவத்தை முன்வைத்து, ரயில்வே அமைச்சகம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்:

தற்போது செயல்பாட்டில் உள்ள 15 ஆண்டுகளுக்கும் மேலான அனைத்து பெட்டிகளிலும் முழுமையான பாதுகாப்பு ஆய்வு நடத்த வேண்டும். பழைய பெட்டிகளை நவீன மற்றும் பாதுகாப்பான ரேக்குகளுடன் விரைவாக மாற்ற வேண்டும். பயண வசதிகள், மேல்படுக்கை பூட்டு அமைப்புகள் மற்றும் மருத்துவ பொருட்கள் உள்ளிட்டவற்றின் பாதுகாப்பு ஆய்வுகளை நிலையான முறையில் செயல்படுத்த வேண்டும்.

அனைத்து நீண்ட தூர ரயில்களிலும் செயல்பாட்டு மற்றும் கையிருப்பு உள்ள முதலுதவி பெட்டிகள் பொருத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள், மேலும் சாத்தியமான இடங்களில், பயிற்சி பெற்ற துணை மருத்துவர்கள், குறிப்பாக இரவு நேர பயணங்களின் போது, உடன் இருக்க வேண்டும். ரயில் பெட்டி வசதிகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவது குறித்து பயணிகளிடையே விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் முதலுதவி மற்றும் அவசரகால நடவடிக்கைகளில் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இத்தகைய பாதுகாப்பு மீறல்களுக்கு விரைவில் தீர்வு காணும் நடைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். இந்த சம்பவத்திற்கு காரணமானவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட்டு பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். இந்திய ரயில்வே, கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரமாக இருக்கிறது. பயணிகளின் பாதுகாப்பையும் தரமான சேவையையும் உறுதி செய்வதில் சமரசம் செய்யக்கூடாது. நிறுவன பொறுப்புணர்வையும் முறையான சீர்திருத்தத்தையும் வலுப்படுத்துவதற்கான ஒரு எச்சரிக்கை மணியாக இந்த சம்பவம் செயல்படும் என்று நம்புகிறேன்.

இந்த விவகாரத்தில் உங்களின் முழுமையான கவனத்தையும் உடனடி நடவடிக்கையையும் எதிர்பார்க்கிறேன். உங்கள் அக்கறைக்கும், நடவடிக்கைக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.